Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி என்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 17 ஆம் நாள் முஹர்ரம் 17 (30-5-64) சனிக்கிழமை இதழ் 111

தேசிய லொத்தர் (சுவீப்)
ஏகவினியோகஸ்தர்கள்:
கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ்
நல்லூர், யாழ்ப்பாணம்.
தந்தி: சீதேவி. தொலைபேசி: 461.
சப் ஏஜன்ஸ் தேவை
உடன் தங்கள் விலாசமிட்ட றப்பர் ஸ்ராம்புடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

# நேருவின் லட்சியத்தை நிறைவேற்றுவோம்

## பத்திரிகை செய்திகளுக்கு மகாநாயக்கதேரோ மறுப்பு

### கூட்டரசாங்கம்பற்றி கருத்து எதுவும் தெரிவிக்கவில்லையாம்

கொழும்பு, வெள்ளி

இலங்கையின் அரசியல் நிலைபற்றி தாம் எந்த விதக் கருத்தும் வெளியிடவில்லையென்றும் இதுசம்பந்தமாக தாம் கூறியதாக பத்திரிகைகளில் வெளியான செய்திகள் தவறென்றும் மல்வத்தை மகாநாயக்க தேரோ அறிவித்துள்ளார்.

பத்திரிகைகளில் தம்மைப் பற்றி வெளியான செய்திகளை மறுத்து, பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்காவுக்கு கடிதமொன்றை அவர் அனுப்பியுள்ளார்.

"அரசியல்நிலை பற்றியோ அல்லது கூட்டரசாங்கம் குறித்தோ நான் எந்தவிதக் கருத்தும் வெளியிடவில்லை. பத்திரிகைகளில் நான் கூறியதாக வெளியான செய்திகள் உண்மையல்ல. இச்செய்திகளை மறுத்து நான் பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதியிருந்தேன். ஆனால் அக்கடிதங்களோ அல்லது அந்தச் செய்திகளுக்கு மறுப்போ வெளியிடப்படவில்லை. இதன் காரணமாகவே நான் உங்களுக்கு இதைத் தெரிவிக்கின்றேன்" என்று மல்வத்தை மகாநாயக்கதேரோ, பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"நான் எந்த அரசியல் ஸ்தாபனத்துடனும் சேர்ந்தவனல்ல. அரசியல் ஸ்தாபனங்களுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. ஆட்சியிலிருக்கும் அரசாங்கம் எதுவாகவிருந்தாலும் அந்த அரசாங்கத்துக்கு மரியாதை செலுத்துவதுதான் எனது நோக்கம்" என்றும் தமது கடிதத்தில் மகாநாயக்கதேரோ குறிப்பிட்டுள்ளார்.

"அரசியல் சம்பந்தமாகநான் கருத்து வெளியிட்டதாகவெளிவந்த செய்திகள் குறித்து நீங்கள் கவலை கொண்டிருப்பீர்கள் என்பதனால்தான் இக்கடிதத்தை உங்களுக்கு அனுப்புகின்றேன்" என்றும் மகாநாயக்கதேரோ தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கூட்டரசாங்கம் ஏற்பட்டால் பௌத்த சமூகம் அழிந்துவிடுமென்றும் இலங்கை ஒரு திபெத்தாகிவிடுமென்றும் மல்வத்தை மகாநாயக்கதேரோ கூறியதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது.

## இந்திய பார்லிமெண்டில் ஒரே குரலில் தீர்மானம்

புதுடில்லி, மே 29

இன்று காலை கூடிய பார்லிமெண்ட் இரு சபைகளிலும் மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மறைந்த தலைவர் நேருவின் இலட்சியங்களை நிறைவேற்ற வேண்டுமென்று சபைகளில் ஏகமனதாக—ஒரே குரலில் தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானமொன்றைக் கொண்டுவரும் பொருட்டு பிரதமர் நந்தா எழுந்த சமயம், சபை அங்கத்தினர்கள் சோகமே உருவாகக் காட்சியளித்தனர். எல்லோரும் துயர வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்தனர். பலரின் கண்களில் நீர் ததும்பி நின்றது. இந்தக் காட்சி உலகின் வேறு எந்தப் பார்லிமெண்டிலும் இதுவரை இடம்பெறவில்லை என்று கூறப்பட்டது.

பிரதமர் திரு. நந்தா அப்பொழுது உரை நிகழ்த்துகையில், ஜவஹர்லால் என்ற நட்சத்திரம் எம்மிடையே கடந்த பதினறு வருடங்களாக விசிக்கொண்டிருந்தது. ஆனால் அது இப்பொழுது ஒளிமங்கி எம்மை இருளில ஆழ்த்திவிட்டது என்று கூறினர்.

"நெருக்கடியான சூழ்நிலையில் எம்மை எமது மதிப்புக்குரிய தலைவர் விட்டுச் சென்றுள்ளார். அவரது மரபுகளை, மாண்புகளை இலட்சியங்களை நாம் பின்பற்றவேண்டும். உலக போராட்டத்தின் ஒரு பகுதியாக அவரின் இலட்சியங்கள் விளங்கின. அவர் எமது தலைவர் மட்டுமல்ல மனித சமுதாயத்தின் தலைவர் அவர் உலகமே தனது தலைவரை இழந்து தவிக்கிறது" என்றும் திரு. நந்தா குறிப்பிட்டார்.

## எம். பி.க்களின் திடசங்கற்பம்

இந்திய ராஜ்ய சபையில் இன்று காலை நேருவின் மறைவு குறித்து அனுதாபத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தைப் பிரேரித்த இந்திய கல்வி மந்திரி திரு. சக்ளா பேசுகையில், இது நேருயுகம் என்றும் தனிச் சிறப்பு வாய்ந்த தலைவர் எம்மை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார் என்றும் கூறினர்.

நேருவின் இலட்சியங்களை நாம் பின்பற்றவேண்டுமென்றும் அவர் விட்டுச் சென்ற கடமைகளை நாம் தொடர்ந்து ஆற்றவேண்டுமென்றும் சபை அங்கத்தினர்கள் இன்று காலை திடசங்கற்பம் செய்துகொண்டனர்.

## தேசிய லொத்தர் சுவீப் முடிவு

கொழும்பு, வெள்ளி

தேசிய லொத்தர் சபையின் 8-வது சுவீப் முடிவுகள் வருமாறு:

முதல் பரிசு: 09 P 6591 ரூ. 50,000

இரண்டாவது பரிசு: 15 O 0912 ரூ. 16,000

முன்றும் பரிசு: 16 D 0057 ரூ. 6,360

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் சிறிமா இன்று திரும்புகிறர்

கொழும்பு, வெள்ளி

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா நாளை நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப் படுகிறது. திரு. நேருவின் ஈமச்சடங்குகளில் கலந்து கொள்ளும் பொருட்டு திருமதி பண்டாரநாயகா புதுடில்லி சென்றிருந்தார்.

புதன்கிழமை மாலை பிரதமரை ஏற்றிக்கொண்டு இங்கிருந்து புறப்பட்ட விசேஷ விமானம் சென்னையில் நின்ற

(5-ம்பக்கம் பார்க்க)

## நேருவுக்கு எலிஸபெத் ராணியின் விசேஷ மரியாதை

புதுடில்லி, மே 29

நேருவின் மரணச்சடங்குகளில்பிரிட்டிஷ் மகாராணிஎலிஸபெத் சார்பில்கலந்து கொண்ட மவுண்ட்பேட்டன் பிரபு இன்று டில்லியிலிருந்து லண்டனுக்குப் புறப்படுமுன்னர் நிருபர்களிடம் தெரிவிக்கையில் 'காலம் சென்ற நேருவுக்கு எலிஸபெத் மகாராணியார் விசேஷ மரியாதை செலுத்தியிருக்கின்றார்" என்று கூறினர்.

"நாட்டு அதிபர்களோ அல்லது மன்னர்களோ மரணமடைந்தால்தான் ராணிதனது பிரதிநிதியை அனுப்பி வைப்பார். ஆனல் பிரதமர் நேருவின் மரணச் சடங்குகளுக்கு என்னை அனுப்பி வைத்ததன் மூலம் அவர் பிரதமர் நேரு மீது எவ்வளவு மரியாதை கொண்டிருந்திருக்கிறார் என்பது தெளிவாகப் புலனாகின்றது" என்றும் மவுண்ட்பேட்டன் பிரபு கூறினர்.

ஒருபிரதமரின் மரணச்சடங்குகளில் அரசியாரின் பிரதிநிதி கலந்து கொண்டது இதுவே முதற்தடவை என்றும் மவுண்ட் பேட்டன் பிரபு கூறினர்.

## ராஜ்காட்டில் பல்லாயிரம் மக்கள் அலையலையாகதொடர்ந்து வருகின்றனர்

ராஜ்காட் மே 26

ராஜ்காட்டுக்கு மக்கள் ஆயிரக்கணக்கில் அலை அலையாக வந்து மறைந்த உலகத்தலைவர் நேருஜியின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்தனை செய்கின்றனர். வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் இன்று காலையும் நேற்றிரவும் ஏராளமான மக்கள் ராஜ்காட்டுக்கு வந்தனர். இன்று பகல் வரை பல்லாயிரக்கணக்கான மக்கள் இங்கு வந்து பிரார்த்தித்து சென்றுள்ளனர். பலர் இங்கேயே பட்டினி இருந்து மௌனப் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர்.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

### மணிவாக்கு

எல்லோரும் ஒரே மாதிரியாகச் சிந்தித்து ஒரே கருத்தைக் கொண்டிருந்தால் உலகம்மிகவும் மந்த கதியில்தானிருக்கும்.

— நேரு


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு வைகாசி 17 (30-5-64)


## இனி என்ன?

இனி என்ன? என்றகேள்வி இந்திய மக்கள் மனதில் மட்டுமன்றி உலக நாடுகளிலும் எழத் தொடங்கியுள்ளது.

"வெண்ணெய் திரண்டுவரும் போது தாழி உடைந்த கதையாக" காஷ்மீர் பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு கண்டு இந்திய-பாகிஸ்தான் உறவில் ஒரு புதிய திருப்பம் ஏற்படவிருந்த சமயத்தில் நேரு மறைந்து விட்டார். ஆசிய ஜோதி மறைவதற்கு முதல்நாள் தான் ஷேக் அப்துல்லா காஷ்மீர் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு கிடைத்துவிடுமென்ற நம்பிக்கையை பாகிஸ்தானில் வெளியிட்டார். ஜூன் மாதத்தில் நேருவும் அயூப்கானும் சந்தித்துப் பேசுவார்களென்றும் அவர் தெரிவித்தார். அந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளி வந்து அந்த "மை" காய்வதற்கு முன்னரே காலன் இந்தியத் தலைவரைக் கவர்ந்து சென்றுவிட்டான். இனி என்ன? என்ற கேள்வி பாகிஸ்தான் தலைவர்கள், மக்களின் மனதில் மட்டுமல்ல காஷ்மீர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதன் மூலம் இந்திய உபகண்டத்தில் நல்லுறவு ஏற்படுத்த முழுமுயற்சி செய்து வந்த ஷேக் அப்துல்லாவிடமும் எழுவது இயல்பு. காஷ்மீர் மக்களும் இதே கேள்வியைத் தான் கேட்க முடியும்.

ஆசியாவிலும் தென்கிழக்காசியாவிலும் ஸ்திரமான அரசாங்கம் இல்லாமல், பெருந்தொகையான பணத்தை உதவியாகவும் கடனாகவும் அளித்து விட்டு அவதிப்பட்ட அமெரிக்க அரசாங்கம் நேருவின் தலைமையில் ஆசியாவிலுள்ள ஒரேயொரு ஸ்திரமான இந்திய அரசாங்கத்துக்கு நம்பிக்கையுடன் உதவியளித்து வந்தது. அமெரிக்காவும் இனி என்ன? என்ற கேள்வியையே கேட்கிறது.

இலங்கையுள்ளிட்டு வெளிநாடுகள் பலவற்றில் உள்ள இந்திய மக்களின் நிலை நிச்சயம் மகிழ்ச்சியடையக் கூடியதாக இல்லை. இலங்கையில் பெருந்தொகையான இந்திய வம்சாவளியினர் 'நாடற்றவர்' களாக்கப்பட்டுள்ளனர். இந்திய வம்சாவளியினர் பிரச்சினையை நேருவின் காலத்திலேயே தீர்த்துவிட வேண்டுமென்று பலரும் பல தடவைகளிலும் வலியுறுத்தி வந்தனர். நேரு மறைந்து விட்டார். இனி என்ன? என்ற கேள்வி இலங்கை அரசாங்கம் மட்டும் அல்ல வெளிநாடுகளிலுள்ள இந்திய வம்சாவளி மக்கள் அனைவரும் கேட்கும் கேள்வி.

இந்தக் கேள்விக்கு சுலபமாகப் பதில் சொல்லிவிட முடியாது. நேரு தான் இந்தியா, இந்தியா தான் நேரு என்றிருந்த காலம் முடிந்து விட்டது. எப்பிரச்சினைக்கும் எவருக்கும் தனி ஒருவராக ஆலோசனை கூறிய தனிமனித ஸ்தாபனம் முடிந்துவிட்டது. நேரு மறைந்துவிட்டார். ஆனால் நேருவின் கொள்கைகளும் இலட்சியமும் மறைந்து விட முடியாது என்பது உண்மைதான். ஆனாலும் அவரது இலட்சியத்தையும் கொள்கையையும் பின்பற்றுபவர்கள் அவர் கைக்கொண்ட அதே வழிமுறையைக் கடைப்பிடிக்க முடியுமா என்பது சந்தேகமே. இலங்கையைப் பொறுத்த வரையில் இந்திய வம்சாவளியினர் பிரச்சினையை இனியும் ஆறப்போட்டு வைக்க முடியுமெனக் கருத முடியாது. இந்திய வம்சாவளியினர் பிரச்சினை இலங்கையினுடையதென்றும் இதைத் தீர்ப்பதில் இந்தியா உதவிதான் அளிக்கலாமென்றும் திரு. நேரு பலதடவைகளில் தெரிவித்திருக்கிறார். தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்துவதன்மூலம் தீர்வு காணலாமென்பதும் அவரது நம்பிக்கையாக இருந்து வந்தது. இந்திய வம்சாவளியினர் பிரச்சினைக்கு இலங்கையிலுள்ள அவர்களது பிரதிநிதிகளுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சுமுகமான, நிரந்தரமான தீர்வு காண்பதே இலங்கைக்குள்ள சிறந்த வழி.

எந்தப் பிரச்சினைகளையும் பேச்சுவார்த்தைமூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தவர் திரு. நேரு. அவரது இந்த நம்பிக்கை வீண் போகாதென்றும் வெளிநாடுகளிலுள்ள இந்தியர் விஷயமானாலும் மற்றும் எல்லாப் பிரச்சினைகளானாலும் சம்பந்தப்பட்ட நாடுகளும் இந்திய அரசாங்கமும் பேச்சுவார்த்தைகள்மூலமே தீர்த்துக் கொள்ள முயற்சி செய்வார்களெனவும் நம்பலாம்.

## வடமராட்சியில் சுகாதார விழா

பருத்தித்துறை, வெள்ளி

வடமராட்சிப் பகுதியில் மக்கள் சுகாதார வாரத்தைக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று வட இந்து மகளிர் கல்லூரியில் வைத்திய சுகாதார அதிகாரி திரு. ஏ. வீ. ஜீவநாயகத்தினால் கூட்டப்பட்டது.

கிராம சேவகர்கள் கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் இறுதிநாள் விழாவை வல்வெட்டித்துறைச் சிதம்பராக் கல்லூரியில் நடாத்துவதென முடிவு செய்ததுடன் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் திரு. எஸ். செல்லத்துரை தலைவராகவும் பொது சன சுகாதாரப் பரிசோதகர் திரு. கனகசிங்கம் செயலாளராகவும் கொண்ட விழாச் சபை ஒன்றும் தெரிவு செய்யப் பட்டது.

ஆசிரியர்கடிதம்

## "தேசியக் கூட்டரசாங்கமே இன்று நமக்குத்தேவை!"

இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில், உள்நாட்டுப் பிரச்சினைகளை வெற்றிகரமாகச் சமாளிக்கவும், சர்வதேச ஒத்துழைப்பையும், நல்லெண்ணத்தையும் பெறவும் வேண்டிய தகுதியைப் பெற்றிருக்கவேண்டியது இலங்கையின் இன்றியமையாத கடமையாகும். தமிழர்களது பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய ஒரு தேசியக் கூட்டரசாங்கத்தால் மட்டுமே இவைகளைச் சாதிக்கமுடியும். சரித்திரத்தின் தொடக்க காலத்திலிருந்தே தமிழர்கள் இந்த நாட்டின் அரசியலில் பங்குபெற்று வந்திருக்கிறார்களென்பதை மறுக்கமுடியாது. நாடு சுதந்திர மடைந்த பின்புங்கூட மந்திரிசபைகளில் தமிழருக்கு இடமிருந்தே வந்திருக்கிறது. தமிழருக்கு மந்திரி சபையிற் பிரதிநிதித்துவம் இல்லாமற்செய்வது அரசியல் நீதிக்கும், இராஜதந்திரத்துக்கும் முரணானது. திறமை வாய்ந்தவர்கள் பலர் ஒதுக்கப்பட்ட இனரீதியான ஒரு கூட்டமைப்பை உருவாக்குவதற்கே இப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

'வெசாக்தினச் செய்திகள் விடுத்த பிரதமரும், கவர்னர் ஜெனரலும், மதிப்புக்குரிய மத பீடாதிபதிகளும், கௌதம புத்தரது விழுமிய 'நடுவழி'க் கொள்கையும், அசோக மன்னனது உயர்ந்த சித்தாந்தங்களும் பின்பற்றப்படவேண்டுமென்று வலியுறுத்தியிருப்பது சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களுடன் விரோத மனப்பான்மையின்றி வாழவேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்தும்வகையில் அமைந்திருப்பது வரவேற்கத்தக்கதே. தமிழ்மக்களை உள்ளடக்கிய தேசியக் கூட்டரசாங்கமொன்றை அமைப்பதன்மூலமே தேசிய ஒருமைப்பாட்டுக்கும், அமைதிக்கும் அத்திவாரம் அமைத்தவர்களாவோம். இத்தகையதொரு முயற்சி உடனடியாகவும், பொதுத்தேர்தலுக்குப்பின்பும் மேற்கொள்ளப்படுதல் அத்தியாவசியமாகும்.

எஸ். சிவசுப்பிரமணியம்.
கொழும்பு.

## 'பக்தியை வளர்க்க வேண்டும்'

ஊர்காவற்றுறை, வெள்ளி

"இளம் உள்ளங்களில் பக்தியைப் வளர்க்க வேண்டும். சமயபிரசங்கம், கூட்டுப் பிரார்த்தனைஎன்பவற்றைஆலயங்களில் தவறாது நடத்திவர வேண்டும். திருவிழாக்காலங்களில் பக்தி நெறியை வளர்க்க முக்கிய இடம் கொடுபட வேண்டும். அப்போதுதான் சைவசமயம் சிறப்படையும். தெய்வம் உண்டா? கோவிலுக்குப் போக வேண்டுமா? என்றெல்லாம் இளைஞர்களில் சிலர் கேட்கிறார்கள். இந்த நிலை மாற்ற இளைஞர் சமுதாயத்தில் பக்திநெறியை ஊட்ட ஆவன செய்தல் வேண்டும்"

இவ்வாறு நாரந்தனை சரவணை ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் 8-ம் திருவிழாவில் உரை நிகழ்த்திய வண்ணை ஸ்ரீ மணிபாகவதர் குறிப்பிட்டார்.

## நிறுவியவர் நினைவுவிழா

விளிசிட்டி, சனி

தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை ஸ்தாபகர் பிரம்மஸ்ரீ க. சுந்தரமூர்த்தி ஐயரின் நினைவுவிழா இம்மாதம் 25-ந் திகதி கொண்டாடப்பட்டது. வித்தியாசாலை பழைய மாணவரும், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியுமான டாக்டர் க. கதிர்காமசேகரம் விழாவுக்குத் தலைமை தாங்கினார். தலைமை ஆசிரியர் திரு. செ. சிவசுப்பிரமணியம் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார். பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் 'சைவமும் தமிழும்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். மாணவரது கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெற்றன. சிரேஷ்ட உதவியாசிரியர் திரு. சி. செல்லத்துரை அனைவருக்கும் நன்றி கூறினார்.

## ஐயாறன் எழுதுவது

தலைமன்னார் கப்பலில் இருந்து இதை எழுதுகிறேன். காலை 7 மணி. ரயில் கணக்காக வந்து, கஸ்டம்ஸ் சோதனை 5 நிமிஷங்களில் முடிந்தது. இந்தியாப்பணம் பதினைந்தும், இலங்கைப்பணம் பத்தும் கைச்செலவுக்குக் கொண்டுவந்தேன். இதைக் கொண்டு போகப்படாதென்றும் இலங்கைப்பணத்தை அங்குள்ள ஒரு கோவாபரேடிவ் சங்கத்தாரிடம் கொடுத்து ஒரு ரசீது பெற்றுக்கொள்ளுமாறும், இந்தியா பணத்தைக் கொண்டு செல்லுமாறும் கஸ்டம்ஸ் சோதகர் கருணையுடன் அனுமதித்தார்.

தலைமன்னார் போர்ட் ஜெனரல் சர்விஸஸ் கோவாபரேடிவ் சங்கத்தாரின் நிபந்தனை என்ன தெரியுமா? மூன்று மாதங்களுக்குள் அவர்களிடம் வைத்த பொருள்களை திருப்பி எடுக்காவிட்டால், ஏலத்தில் விற்றுப் போடுவார்களாம். ரூ.100மதிப்புள்ள பொருள்களுக்கும், அதற்குக் குறைவானதற்கும்,நாளொன்றுக்கு 15 சதம் கட்டணமாம். அதாவதுஎன்னிடமிருந்த பத்துரூபாயைக் கொடுத்தால் நாளொன்றுக்கு 15 சதம்வீதம் எடுத்துக்கொண்டு, திரும்பி வருகையில் மீதம் ஏதாவது இருப்பின் திருப்பிக்கொடுப்பார்களாம்! அல்லது நாம் சொல்லும் விலாசத்துக்கு மணியாடர் முதலிய கட்டணம் போக மிகுதியை அனுப்பி விடுவார்கள்.

இந்தியாவிலிருந்து திரும்புகையில் ஏதாவது கஸ்டம்ஸ் தீர்வை, ரயில்வே ரிசர்வேஷன் முதலியவற்றுக்குப் பயன்படட்டுமென்றே இலங்கைப்பணத்தைக் கொண்டு வருகிறோம். ஆனால் அதற்கும் இப்படித் தடை. இருதேச செலாவணிச் சட்டங்களும் நம்மைச்செய்யும் உபத்திரவம் கொஞ்சமன்று. அதிகாரிகளைக் குறைசொல்லிப் பயனில்லை. அவர்கள் சட்டப்படி தங்கள் கடமையைச் செய்ய வேண்டியவர்கள். இந்தச் சட்டங்கள் போட்டுள்ளார்களே அந்த மகானுபாவர்களைத்தான் சொல்ல வேண்டும். இருதேச அரசாங்கங்களுக்கும் பேச்சு நடக்கப்போவதாயும், அடுத்த மாதம் மந்திரி லட்சுமிமேனன் கொழும்புக்கு வருவதாயும், கேள்விப்பட்டேன். இந்தச் செலாவணிச் சங்கடங்களை இருதேசங்களும் பொது மக்களின் நன்மைக்கான முறையில் சற்றே தாராள மனப்பான்மையுடன் தளர்த்தினால் எவ்வளவோ பலனுண்டு.

கஸ்டம்ஸில் இதுவரை இல்லாதபடி நாம் கட்டியுள்ள ரிஸ்ட் வாச் "என்ன மேக்" என்று பதியச் சொல்கிறார்கள். அவரிடமே இதைக்காட்டியதில், அவரால் புரிந்து கொள்ள முடியாமல் 'ஒரு ரிஸ்ட் வாச்' என்று பாஸ்போர்ட் பின்புற அட்டையில் எழுதினார். குடை, தர்மோஸ் பிளாஸ்க், டார்ச்லைட் இவை ஏதும் இருக்கிறதா என்றும் கேட்கின்றனர். அப்படி இருந்தால் அதையும் எழுதி விடுகிறார்கள். காரணம் திரும்பி வரும்போது அவற்றை இலங்கைக்குக் கொண்டுவரவேண்டுமென்பதற்கே!

இன்று கப்பலில் அதிக கூட்டமில்லை. 50 பேர்தான். காரணம் விடுமுறை நாட்கள் வந்துவிட்டதால், எக்ஸ்சேஞ்ச் முதலியவை பெறமுடியாதது தான். பிறபின்.

* * *

நல்லாரறஞ் சொல்லப் பொல்லார் புறங் கூற
அல்லாரலர் தூற்ற அடியார்க்கருள் செய்வான்
பல்லார் தலைமாலையணிவான் பணித்தேத்தக்
கல்லார் கடல் நாகைக் காரோணத்தானே

— திருஞானசம்பந்தர்

# சைப்பிரஸ் தகராறு
## கியானி அறிக்கை

நிக்கோஸியா, மே 29

சைப்பிரஸில் வாழும் இரு தரப்பினரும் தங்களது ஆயுதங்களைக் கைவிடாதவரை சைப்பிரஸில் பலாத்கார சம்பவங்களையும், சண்டைகளையும் நிறுத்துவது கடினமென்று ஜெனரல் கியானி தெரிவித்துள்ளார்.

சைப்பிரஸிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைச் சமாதானப் படையின் தளபதியான ஜெனரல் கியானி கடந்த இரண்டு மாத காலத்திலும் இங்கு ஏற்பட்டுள்ள சில சம்பவங்கள் குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

சைப்பிரஸில் ஐ. நா. சமாதானப்படை சேவையாற்றத் தொடங்கிய இருமாத காலத்திற்குள் இங்கு வாழும் இரு சமூகத்தினரிடையே ஏற்படும் சண்டைகள் வெகுவாகக் குறைந்திருக்கிறதென்றும் இப்பகுதியில் பூரண அமைதி நிலவுவதற்குச் சகலரும் தங்களது ஆயுதங்களை எம்மிடம் ஒப்படைத்து கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டுமென்றும் ஜெனரல் கியானி குறிப்பிட்டுள்ளார்.

## ஆயுள்கால ஜனாதிபதி

ஹைடி, மே, 29

ஹைடி ஜனாதிபதி மூவலியர் ஆயுள்காலம் முழுவதும் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என்னும் புதியதோர் அரசியல் சட்டத்தை அந்நாட்டின் அரசியல் நிர்ணயசபை நிறைவேற்றியுள்ளது.

## பனிப்புலம் அம்பாள் கொடியேற்றம்

சுழிபுரம், வெள்ளி

பனிப்புலம் அம்பாள்கோவில் கொடியேற்றம் புதன்கிழமை ஆரம்பமாகியுள்ளது. தினமும் விசேட அலங்காரத் திருவிழாக்கள் நடைபெறும். 5-6-64 வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறும். அதையடுத்துத் தீர்த்த, பூங்காவன விழாக்கள் நடைபெறும். யாழ்ப்பாணத்திலுள்ள பலிநிறுத்தப்பட்ட ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும்.

## மட்டக்களப்பில் மறுமலர்ச்சி மன்றத்தினர்

சுழிபுரம், வியாழன்

யாழ். மறுமலர்ச்சி மன்றத்தினர் மட்டக்களப்பிலுள்ள ஏறாவூர் பகுதியில் இரண்டு நாடகங்களை மேடை ஏற்றுவதற்குத் தமது கோஷ்டியுடன் பிரத்தியேக பஸ்வண்டி மூலம் நேற்று பயணமானார்கள் 'வழி தெரிந்தது' 'இன்பக் கனவு' ஆகிய நாடகங்கள் மேடை ஏற்றப்பெறும். யாழ். மறுமலர்ச்சி மன்றத்தினர் பல நாடகங்களை மேடையேற்றி இன்று முன்னணிக்கு வந்துகொண்டு இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நேருவின் மறைவுக்கு மக்களின் உருக்கமான பிரார்த்தனை

# நள்ளிரவிலும் ராஜ்காட்டுக்குச் சென்றனர்

## ஆசிய ஜோதியின் அஸ்தி அலகபாத்தில் கரைக்கப்படும்

புதுடில்லி, மே 29

ராஜ்காட்டில் யமுனா நதிக்கரையில் நேற்று இரவு முழுவதும் மக்கள் திரள் திரளாக வந்து பிரார்த்தனை செய்துகொண்டிருந்தனர். வெளி இடங்களிலுமிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று நள்ளிரவு ராஜ்காட்டுக்கு வந்து, அக்கினியுடன் கலந்து அமரரான உலகத் தலைவர் ஜவஹர்லால் நேருவுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நேற்று உலகமே சோக வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தது. இந்தியாவில் என்றுமில்லாத பூரண அமைதி நிலவியது. கடைகள் பூட்டப்பட்டிருந்தன. சாலைகளில் போக்குவரத்து நடைபெறவில்லை. ஆலைகளில் வேலையில்லை. நிமிடத்துக்கு நிமிடம் உற்பத்திபெருக்கத்தை அதிகரித்துக் கொண்டிருந்த தொழிற்சாலைகள் தங்களின் ஆக்கத் தலைவருக்கு மௌன அஞ்சலி செலுத்தும் பொருட்டு ஓய்ந்து கிடந்தன. நாட்டின் சகல துறைமுகங்களிலும்கூட இறக்குமதி ஏற்றுமதி வேலைகள் நடைபெறவில்லை. எங்கும் பூரண அமைதி. எத்திசையை நோக்கினாலும் மக்கள் கண்ணீர் வெள்ளத்தில்தான் மூழ்கிக் கிடந்தனர்.

நேற்றுப் பகல் ஒருமணி பத்துநிமிட நேரத்தில் பிரதமர் நேருவின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து தூக்கப்பட்டது. நாட்டின் முன்னேற்றத்துக்கு அயராது உழைத்த உடல் இன்று அக்கினியுடன் கலக்கப் போகின்றதே என்ற ஏக்கத்தில் பூமாதேவி கூடக அதிர்ந்து விட்டிருக்க வேண்டும். அவரது பூதவுடல் தூக்கிச் செல்வதற்கு சுமார் ஒருமணி நேரத்துக்கு முன்னதாக புதுடில்லியில் பூமியதிர்ச்சி ஏற்பட்டது. சோக வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த மக்களுக்கு இவ்வதிர்ச்சி பேரதிர்ச்சியைக் கொடுத்தது.

நேருஜியின் அஸ்தியை எடுப்பதற்காக அவரின் உறவினர்கள் இன்று காலைவரை ராஜ்காட்டில் இருந்தனர். அவரின் அஸ்தி கங்கை, யமுனா, ஸரஸ்வதி ஆகிய நதிகள் ஒன்றாகச் சந்திக்கும் அலகபாத்தில் கரைக்கப்படும். நேருஜியின் அஸ்தி பல புண்ணிய இடங்களுக்கும் எடுத்துச் செல்லப்படும்.

நேருஜியின் மறைவு குறித்து இன்றுமாலை ஆறுமணிக்கு புதுடில்லியில் மாபெரும் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது. இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதமர் நந்தா, மொரார்ஜி தேசாய், லால்பகதூர்சாஸ்திரி ஆகியோர் உட்பட பலர் பேசினர்.

## "உலகுக்கு நேரு சொந்தம்"

### ஈரான் மன்னர் அனுதாபம்

டெஹ்ரான், மே 29

"நேருவின் மறைவு பேரிழப்பு. அவர் உலகுக்கே சொந்தமானவர்" என்று ஈரான் மன்னர் தெரிவித்துள்ளார் நேருஜியின் மரணம் குறித்து மன்னர், இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு அனுதாபச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார். இங்கு இரண்டுநாட்களுக்குத் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

நைரோபியில் நேற்று துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. இங்குள்ள இந்திய சமூகத்தினர் தங்களது வர்த்தக நிலையங்களை மூடியிருந்தனர். ஸான்ஸிபாரிலும நேற்று ஒருநாள் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. கானாவில் சட்டசபை உறுப்பினர்கள் நேற்று நேருவின் மறைவுக்கு அஞசலி தெரிவித்தனர். உகண்டாவில் சட்டசபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. குவைத்தில் மூன்று தினங்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படுமென்று குவைத் அரசாங்கம் அறிவித்துள்ளது. டூனிஷியாவிலும், வடக்கு ரொடிஷியாவிலும் நேற்று பூரண மரியாதை செலுத்தப்பட்டது. ஈராக்கில் மூன்று நாட்கள் துக்கமனுஷ்டிக்கப்படும். கனடாவில், ஒட்டாவா காமன்ஸ் சபையில் நேற்று அங்கத்தவர்கள் மௌனம அனுஷ்டித்தனர்.

பீக்கிங்கில், சீனப்பிரதமர் திரு. சூ-என்-லாய் உதவிப் பிரதமர் மார்ஷல் சென்-யீ ஆகியோர் இந்தியத் தூதரகத்துக்குச் சென்று அனுதாபம் தெரிவித்தனர். யூகோஸ்லேவியாவில் இருதினங்கள் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. ஆஸ்திரேலியாவில் நேற்று துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது, ஆஸ்திரேலிய பிரதமர் திரு. ரொபர்ட் மென்சிஸ் "உலகிற்குப் பெரும் சோதனை" என்று தெரிவித்துள்ளார். இஸ்ரேலிலும் நேற்று துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

## "மண்டல சார்பற்ற கொள்கையின் சிற்பி"

### நேருவுக்கு பிராவ்டா புகழ் அஞ்சலி

மாஸ்கோ, மே. 29

"மறைந்த நேரு மண்டல சார்பற்ற கொள்கையின் சிற்பி" என்று சோவியத் யூனியன் அரசாங்க பத்திரிகையான "பிராவ்டா" தெரிவித்துள்ளது.

நேற்று வெளியான ரஷ்யப் பத்திரிகைகளில் நேருவின் மரணச் செய்திகளும் புகைப் படங்களும் முதற் பக்கங்களில் வெளியாகியிருந்தன.

சோவியத் பிரதமர் குருஷ்சேவ் விடுத்துள்ள ஓர் அனுதாபச் செய்தியில்; சோவியத் யூனியனுக்கும் இந்தியாவுக்கும் பிணைப்பை ஏற்படுத்தியவர் நேருதான் என்றும் அவரின் மறைவினால் சோவியத் யூனியன் பெரும் துயர் அடைந்துள்ளதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் புதிய பிரதமர், நேருவின் கொள்கைகளை கடைப் பிடிப்பார் என்றும் ரஷ்யா - இந்திய நேச உறவு விருத்திபெற அவர் உழைப்பார் என்றும் ரஷ்யா நம்புகிறதென்றும் குருஷ்சேவ் குறிபிட்டுள்ளார்.

## "உலக அரசியல் தலைவர்"

### ஜெனிவா வர்த்தக மகாநாடு தீர்மானம்

ஜெனிவா, மே 29

ஜெனிவாவில் கூடிய வர்த்தக மகாநாட்டில் நேருஜியின் மரணத்துக்கு நேற்று அஞ்சலி தெரிவிக்கப்பட்டது.

இம் மகாநாட்டில் கலந்து கொண்ட 121 நாடுகளைச் சேர்ந்த 800 பிரதிநிதிகல், பிரதமர் நேருவுக்கு அஞ்சலி செலுத்தினர்.

மகாநாட்டுத் தலைவர் தெரிவிக்கையில்; நேரு ஓர் உலக அரசியல் தலைவரென்றும் நேருவைப்போன்றவர்கள் உலகில் அடிக்கடி தோன்றமாட்டார்கள் என்றும் கூறினர். இறுதியில் இந்திய அரசாங்கத்துக்கு ஒரு அனுதாபத்தீர்மானம் அனுப்புவதென்று மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது.

நேரு ஓர் உலக அரசியல் தலைவர் என்றும் விவேகமுள்ள ஓர் அரசியல் ஞானியை உலகம் இழந்துள்ளது என்றும் அத் தீர்மானத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## சீன செய்தி இதழ்களில்....

பீக்கிங், மே 29

நேருவின் மறைவு குறித்து இந்திய ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், திருமதி இந்திராகாந்தி ஆகியோருககு சீனப்பிரதமர் அனுப்பிய குறுகிய அனுதாபச் செய்திகளை சீனப்பததிரிகைகள் தனது முதற்பக்கத்தில் நேற்றுப் பிரசுரித்திருந்தன.

நேருவின் மறைவு, திரு. நந்தாவின் புதிய பதவி ஆகியவைகுறித்து சீனப்பத்திரிகைகளின் உள்பக்கங்களில்மூன்று பந்திகளில் செய்திவெளியாகியிருந்தன. ஒரு பத்திரிகையிலும் நேருவின் மறைவுகுறித்து அபிப்பிராயம் தெரிவிக்கப்படவில்லை.

## ரஸ்ஸல் பிரபு அஞ்சலி

லண்டன், மே 29

நேருவின் மரணம் குறித்து அதிர்ச்சியடைந்த உலக வங்கித் தலைவர் "நவபாரதத்தின் சிற்பியாக அவர் விளங்குவார்" என்று தெரிவித்துள்ளார்,

பிரிட்டிஷ் தத்துவஞானி பேட்ரம் ரஸ்ஸல் பிரபு அனுதாபம் தெரிவிக்கையில் "நேருவின் நடுநிலைமைக் கொள்கைகள் அபாரசக்தி வாய்ந்தவையென்றும் அவரின் கொள்கைகளினால் பலதடவைகளில் ஏற்படவிருந்த யுத்தங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன" என்றும்குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் எல்லாப் பத்திரிகைகளும் நேருவின் மரணம் குறித்துச் செய்திகள் வெளியிட்டிருந்தன. முதற்பக்கத்திலே நேருவின் வாழ்க்கை வரலாறுகளும் பல புகைப் படங்களும் பாகிஸ்தான் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன.

கம்போடியாவில் மூன்று நாள் துக்கம் அனுஷ்டிக்கப்படும். இதேமாதிரி காட்மாண்டிலும் மூன்றுநாள் துக்கம் அனுஷ்டிக்கப்படும். சிங்கப்பூர், பர்மா ஆகிய இடங்களிலும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. சிங்கப்பூர் பத்திரிகைகள் பிரமாதமான செய்திகளை வெளியிட்டிருந்தன.

## ஐஸனோவர் அனுதாபம்

கெட்டிஸ்பேர்க், மே 29

"சர்வதேச அமைதிக்குஉண்மையுடன் பாடுபட்ட இந்தியத் தலைவரை அறியாதவர்கள் இல்லை" என்று முன்னாள் அமெரிக்க அதிபர் ஐஸனோவர் தெரிவித்துள்ளார்.

பத்திரிகைகளுக்கு ஜெனரல் ஐஸனோவர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளதாவது: "நேருவின் மரணத்தினால் உலகமே சோக வெள்ளத்தில் மூழ்கியிருக்கும் என்பதை உணருவேன். அவரை வெறுப்பவர்கள் சிலர் இருந்தாலும் அவரின் சமாதானபபணியை அவர்களால் மறுக்க முடியாது. அவருடைய சந்திப்பின்மூலம் நான் பல நன்மைகளை அடைந்துள்ளேன். அவரின் பிரிவினால் துயருறும் மக்களுக்கு என்னுடைய அனுதாபங்கள்."

## ஜாக்லின் கென்னடி அனுதாபத் தந்தி

வாஷிங்டன், மே 29

காலம்சென்ற அமெரிக்க ஜனதிபதியின் மனைவி திருமதி ஜாக்லின் கென்னடி, பிரதமர் நேருவின் மரணம் குறித்து நேருவின மகளான திருமதி இந்திராகாந்திக்கு அனுதாபத் தந்தியொன்றை அனுப்பியுள்ளார்.

"பிரதம மந்திரியின் மரணம் குறித்து நான் அதிர்ச்சியடைந்தேன். அவரின் மறைவினால் உலக மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை நான் உணர்வேன்" என்று திருமதி கென்னடி தமது அனுதாபத் தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

திருமதி ஜாக்லின் கென்னடி சென்றவருடம் இந்தியாவுக்குச் சென்றிருந்தபொழுது, பிரதமர் நேருவினதும் திருமதி இந்திராகாந்தியினதும் விருந்தினராகவிருந்தார்.

## "பேரிழப்பு"

ஒட்டாவா, மே 29

"சாதி, மத துவேஷங்களை நீக்கி உலகில் சமாதான முன்னேற்றத்தை விரும்புபவர்களுக்கு நேருவின் மறைவு பேரிழப்பாகும்" என்று கனடா பிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸன் தெரிவித்துள்ளார்.

## மகபகால் வருத்தம்

பிலிப்பைன்ஸ், மே 29

"நேருவை இழந்ததன் மூலம் ஆசியா, தனது அரசியல் ஞானியொருவரை இழந்துள்ளது" என்று பிலிப்பைன்ஸ் அதிபர் மகபகால் தெரிவித்துள்ளார்.

## 'மறக்கமாட்டோம்'

லாகோஸ், மே 29

"நைஜீரிய மக்கள் நேருவை என்றும் மறக்கமாட்டார்கள்" என்று நைஜீரிய பிரதமர் சர் அபூபக்கர் தஉபாவாபலேவா தெரிவித்துள்ளார்.

## 'இந்தியாவின் தந்தை'

லண்டன், மே 29

"இந்தியா ஒரு தந்தையை இழந்துள்ளதென்று வட நைஜீரிய பிரதமர் சர் அகமது பெல்லோதெரிவித்துள்ளார். கிாமன்வெல்த் தனது ஜனநாயக தலைவரை இழந்துள்ளது. உலகம் ஒரு சுதந்திர வீரரை இழந்துள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 'சுதந்திர உலகுக்கு நஷ்டம்'

ஏதன்ஸ், மே. 29

"நேருவின் மரணம் சுதந்திர உலகுக்கு பெருநஷ்டம்" என்று கிரேக்கபிரதமர் திரு. ஜோர்ஜ பப்பண்றியோ தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை, வெள்ளி

காலஞ் சென்ற இந்தியப் பிரதமர் நேருஜீயின் மறைவு குறித்து அவருக்கு அஞ்சலி செய்யும்முகமாக பருத்தித்துறைக் கடற்கரை மைதானத்தில் 31-5-64 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு மாபெருங் கூட்டமொன்று நடைபெறும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல அறிஞர்கள் இவ் அனுதாபக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

## தென்கிழக்காசிய நிலை: ஜோன்ஸன் நடவடிக்கை

வாஷிங்டன், மே 29

தென் கிழக்காசிய நெருக்கடி சம்பந்தமாக ஆராயும் பொருட்டு அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்ஸன், ஓர் உயர்தர மகாநாடொன்றைக் கூட்ட நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஹொனலுலுவில் நடைபெறவிருக்கும் இந்த மகாநாட்டுக்கு அமெரிக்க உயர்தர இராணுவத் தலைவர்களும் ஆலோசகர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்க ராஜாங்க காரியதரிசி திரு. டீன்ரஸ்க தலைமையில் நடைபெறும் இம்மகாநாட்டில், தென் வியட்னாமில் உள்ள அமெரிக்கத் தூதர் திரு. ஹென்றி கபெட்லொட்ஜ், அமெரிக்க பாதுகாப்புக் காரிய தரிசி திரு. மக்னமாரா, ஜெனரல் டெயிலர் ஆகியோரும் கலந்துகொள்வார்கள். இந்த மகாநாடு அநேகமாக அடுத்த திங்கட்கிழமை நடைபெறலாமென்று நம்பப்படுகிறது.

## டேனிஷ் பிரதமர் அனுதாபம்

லண்டன், மே. 29

டேனிஷ் பிரதமர் திரு. ஜென்ஸ் ஒட்டோஃக் இந்திய ஜனதிபதிக்கு அனுப்பிய செய்தியில், அரசியல் ஞானியை உலகம் இழந்துவிட்டதென்றும் இந்திய மக்களுக்கு தங்களின் ஆழ்ந்த அனுதாபம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# நேருவின் மரணம் குறித்து இலங்கையர் துயரம்

## தலைவர்களும் ஸ்தாபனங்களும் அனுதாபச் செய்தி

கொழும்பு, வெள்ளி

பிரதமர் திரு. நேருஜியின் மரணம்குறித்து இலங்கையின்பல் வேறு கட்சித் தலைவர்களும் அனுதாபம் தெரிவித்துள்ளார்கள்.

கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா தமது அனுதாபச் செய்தியில் "திரு. நேருவின் மரணம் குறித்து ஆழ்ந்த அனுதாபப்படுகிறேம். இலங்கை மக்கள் சார்பிலும் எனது சார்பிலும் எமது அனுதாபங்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திருமதி பண்டாரநாயகா புதுடில்லி போகுமுன் அனுப்பி வைத்த அனுதாபச் செய்தி குறிப்பிடுவதாவது:-

"திரு. நேருவின் திடீர் மரணம் குறித்து நான் மிகுந்த அதிர்ச்சியடைந்தேன். திரு. நேருவின்மரணத்தால், ஆசியா சமாதானத்துக்காகப் பாடுபட்டு வந்த தனது பிரசித்தி வாய்ந்த தலைவரையும், உலகம் தனது மிகத்திறமை மிக்க ராஜதந்திரி ஒருவரையும் இழந்து விட்டது. இலங்கையின் உண்மையான நண்பரான திரு. நேரு தனது மனிதாபிமானத்தாலும், துணிவினுலும், சிறந்த குணங்களாலும் இந்நாட்டு மக்களின் இதயத்தில் இடம் பெற்றுள்ளார் அரசாங்க சார்பிலும், எனது நாட்டு மக்கள் சார்பிலும் இந்திய மக்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக.

திருமதி இந்திரா காந்திக்கு அனுப்பிய தனிப்பட்ட அனுதாபச் செய்தியில் பிரதமர் "காலஞ்சென்ற பிரதமரான எனது கணவரும் திரு. நேருவும் பல இலட்சியங்களுக்காக ஒன்று சேர்ந்து உழைத்தவர்கள். அவர்களின் தலைமையில் எமது இருநாடுகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. நானும் எனது நாட்டு மக்களும் இந்த கவலையான நேரத்தில் எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

திரு. டட்லி சேனநாயகா:-

உலகத் தலைவர் நேருவின் மரணம் குறித்து இலங்கை மக்கள் துக்கத்தில் மூழ்கியுள்ளனர். ஜனநாயகத்தின் பராமரிப்பாளரும் உலகசமாதானத்தின் பாதுகாவலருமான திரு. நேரு அறிஞர்களுக்கிடையே அறிஞராகவும், தலைவர்களுக்கிடையே தலைவராகவும், அரசியல் ஞானியாகவும் விளங்கினர். எனது கட்சிசார்பிலும், நாட்டுமக்கள்சார்பிலும் எனது சார்பிலும் இந்திய மக்களுக்கும், நேரு குடும்பத்தினர்க்கும் எனது ஆழ்ந்தஅனுதாபங்கள்.

திரு. பிலிப் குணவர்த்தன:-

திரு. நேரு இந்தியாவின் வீர புருஷர்களில் ஒருவர். சிந்தனைச் சிற்பியும், சிறந்த எழுத்தாளனும், உயர்ந்த ராஜதந்திரியுமான திரு. நேரு இறக்கும் வரையும் எதிர்க்கப்படாத ஆந்தியத் தலைவராக விளங்கினர். அவர் விட்டுச்சென்ற அந்த இடத்தை இந்தியாவிலுள்ள எந்த ஒரு தனிமனிதரும் நிரப்ப முடியாது. அவர் தனியே செய்த வேலையைச் செய்ய இந்தியாவின் திறமை மிக்கவர்கள் பன்னிருவர்வேண்டும். திரு. நேருவின் மரணம் சமாதானத்தை விரும்பும் மக்கள்எல்லோருக்கும்பேரிழப்பே

திரு. எஸ். ஏ. விக்கிரமசிங்கா:-

இந்தியாவின் வீரராக மட்டும் திரு. நேரு திகழவில்லை. முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தைஎதிர்த்து போராடிய ஒரு உலகத் தலைவராகவும் இருந்தார். நடு நிலைமைக் கொள்கையைக்கடைப்பிடித்து உலக சமாதானத்துக்குப்பாடுபட்டு ஒரு ஞாபகச்சின்னத்தை நிறுவியுள்ளார்."

திரு. கே. எம். பி: ராஜரத்னு:-

"இந்திய மக்களுக்கும் நேருவின் புதல்வி திருமதி இந்திரா காந்திக்கும் நேருவின் மரணம் குறித்து எனது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன்."

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்:-

உலகின் மிகப்பெரிய பார்லிமெண்டரி ஜனநாயகத்தின் தலைவராக திரு. நேரு விளங்கினர். சீனவுடன் இந்தியாவுக்குச் சச்சரவு ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் திரு. நேரு மரணமானது ஈடுசெய்யமுடியாத அதிர்ஷ்டமாகும்."

திரு. எஸ். எம். சுப்பையா:-

இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸுடன் திரு. நேரு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். எமது இயக்கத்தின் ஸ்தாபகர் அவரே. எங்கள் வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் விளங்கினர். வருங்கால சந்ததியினர் பல தலைமுறைகளாக அவரின் சேவைகளைத் தொடர்ந்து பெறுவார்கள்.

திரு. ஏ. அஸீஸ்:-

"நேருவின் மரணத்தால் இந்தியா ஒரு தலைசிறந்த தலைவரையும், இந்தியாவில் உள்ள முஸ்லிம் போன்ற சிறுபான்மையினர் தமது சிறந்த நண்பரையும் ஆசிய ஆபிரிக்க நாடுகள் ஒரு வீரரையும், உலகம் ஒரு சமாதான சக்தியையும் இழந்து தவிக்கின்றது."

"திரு. நேரு மனித சமூகத்துக்கு செய்த சேவைகளை அளவிட்டுக் கூறமுடியாது. அவர் தனது தேசத்துக்கு மட்டுமல்லாமல் பௌத்த சமயத்துக்காகவும் பாடுபட்டார். புத்தஜெயந்தி கொண்டாட்டத்துக்கு கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்தார். உலகெங்கிலுள்ள பௌத்தர்கள் பௌத்த சமயத்துக்கு திரு.நேரு செய்த சேவை குறித்துஅவருக்குஎன்றும் 'கடமைப் பட்டவர்களாவார்கள்" என்று மல்வத்தை பீடாதிபதியும், அஸ்கிரிபீடாதிபதியும் நேருவின் மரணம் குறித்து கூட்டாக வெளியிட்ட அனுதாபச்செய்தியில் குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட ஐ. நா. சங்கம் கொழும்பிலுள்ள இந்திய தூதருக்கு அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்படுவதாவது:

"இந்தியாவின் புதிய அசோகரான பிரதமர் நேருவின் மரணம் குறித்து இந்திய மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இந்திராகாந்திக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேம். அசோகனின் தர்மக் கொள்கைகளை கடைப்பிடித்து இந்தியாவின் சகல இன, மதமக்களும் பரஸ்பர நல்லெண்ணத்துடன் வாழ வழி செய்யும். ஜனநாயக சோஷலிஸ இந்தியாவை ஸ்தாபித்தார். சர்வதேச விவகாரங்களில் பஞ்சசீலக் கொள்கைகளை கடைப்பிடித்து சமாதானத்துக்குப் பாடுபட்டார்."

யாழ்ப்பாணம் பெற்ருேர் சங்கம் இன்று இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு அனுப்பிய அனுதாபச் செய்தியில குறிப்பிட்டதாவது:

"திரு. நேருவின் திடீர் மரணத்தால் உலகசமாதானத்துக்கும் நடுவழிப் பாதைக்குமான முயற்சி பின்னடைந்து விட்டது. தமிழ்பேசும் பெற்ருேர், குழந்தைகள் சார்பில் இந்திய மக்களுக்கும் நேரு குடும்பத்தினருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேம்."

# ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ் வித்தியாசாலையில் 30-5-64 சனிக்கிழமை யாழ். மேயர் திரு. தா. ச. துரைராசாவின் தலைமையில் நல்லூர்ப் பாராளுமன்றத் தொகுதியிலுள்ள பாடசாலைகளைப் புனருத்தாரணஞ் செய்தல் என்னும் விஷயம் பற்றி ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற இருக்கிறதென்று அறிவிக்கப்படுகிறது.

நல்லூர் எம். பி. திரு. ஈ. எம். வி. நாகநாதன் விசேஷ சொற்பொழிவாளராகக் கலந்துகொள்ள இருக்கிருர்.

# பக்தர்களின் பாதயாத்திரை

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்ற 25-5-64 திங்கட்கிழமை இரவு 9 மணிக்கு நல்லூர் கோயிலிலிருந்து செல்வச்சந்நிதிக்கு 200 பக்தர்கள் பாதயாத்திரையாக முருகன் படத்துடன் திரு இ. கந்தசாமியின் தலைமையில் புறப்பட்டார்கள். மறுநாள் காலை 6-30 மணிக்குச் செல்வச்சந்நிதியையடைந்தார்கள். யாழ். மாநகரசபை அங்கத்தவர் திரு. எஸ்.துரைராஜசிங்கமும், அ.இ பொதுஜன சேவைச் சங்கச்சமயப் பிரசாரச் சபை உப தலைவர் திரு. பொன் அப்புக்குட்டியும் இச்சபையின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

# யாழ். பண்டிதர் மன்ற அங்குரார்ப்பணம்

உடுப்பிட்டி, வெள்ளி

யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க பாலபண்டித பண்டித வகுப்புகளில்சித்தியெய்தி வேலையற்றிருப்பவர்கள்வடமராட்சிவாணி கலைக்கழக மண்டபத்தில் ஒன்றுகூடி 'யாழ்ப்பாணப் பண்டிதர் மன்றம்' ஒன்றை அங்குரார்ப்பணம் செய்தனர்.

உயர்தர தமிழ்த் தேர்வுகளில் சித்தியெய்தியும் ஆசிரிய மாணவராகக்கூட நியமனம் பெறமுடியாத அளவிற்குப் பண்டிதர்கள் புறக்கணிக்கப்படுகிருர்கள் என்றும் இந்நிலைமை வெகுவிரைவில் மாற்றப்பட்டேயாகவேண்டும் என்றும் மேற்படி மன்ற ஆரம்பக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசிய பண்டிதர் சி. க. நடராஜா குறிப்பிட்டார்.

பண்டிதர் பரமகுரு, பண்டிதை தில்லைநாயகி ஆகியோர் பேசியபின் நடப்புவருட உறுப்பினர்களாகப் பின்வருவோர் வெவ்வேறிடங்களிலிருந்து ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: பண்டிதர் சி. க நடராஜா, துணைத் தலைவர் பண்டிதர் இ.பரமகுரு, இணை பொருளாளர்: பண்டிதை த நல்லைநாயகி, பண்டிதை வே. சாந்தநாயகி.

ஏனைய ஆட்சிக்குழுவினர்கள்: பண்டிதர்கள் க. சீவரத்தினம், த. வைகுந்தம், சி. புவனம், கு. மனேன்மணி.

பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

யாழ். ஆ. தி.பா. சங்கப்பாலபண்டிதபண்டிததேர்வுகளில் சித்தியெய்தியவர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்குமாறு இம்மன்றம் கௌரவ கல்வி மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்கிறது.

இம்முயற்சிக்குப் பக்கபலமாக நின்று பரிபூரண ஒத்தாசை செய்யுமாறு இந்நாட்டிலுள்ள சகல ஆசிரியர் சங்கங்களையும் கேட்டுக்கொள்கிறது.

சகல அரசியல்கட்சிப் பிரதிநிதிகளையும், ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளையும், பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர்களையும் அழைத்து ஜூன் மாத முற்கூற்றில் விசேட பொதுக்கூட்டம் ஒன்றை நடாத்துவது.

# இருவர் இறந்தனர்; 19 பேருக்குப் படுகாயம்

மாத்தளை, வியாழன்

இரண்டு தொழிற் சங்கங்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் கந்தநுவரைத் தேயிலைத் தோட்டக் காவல்காரர்களான ராமையாவும், அழகனும் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ததால் ஜோன் வீரையா என்ற இரு தோட்டத் தொழிலாளர் ஸ்தலத்திலேயே மாண்டனர். 19 தொழிலாளர் காயமுற்றனர். காலை 8 மணியளவில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

சம்பவம் நடந்த இரண்டு மணி நேரத்தின் பின் விசாரணை நடத்திய மாஜிஸ்டிரேட் அழகனையும், ராமையாவையாவையும் விளக்கமறியலுக்கு அனுப்பிவைத்தார்.

ஐக்கிய தோட்டத் தொழிலாளர் யூனியனுக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்குமிடையில் நிகழ்ந்த கைகலப்பின் போதே இவ்வாறு நிகழ்ந்ததாகத் தெரிய வருகிறது.

# புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, புதன்

நாரந்தனை வடக்கு-கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருபவர்கள் புதியநிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. நா. விசுவலிங்கம், காரியதரிசி: திரு. சி. கனகரத்தினம் (ஆசிரியர்), தனதிகாரி: திரு. ஆ. சிவநாதபிள்ளை. நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நாரந்தனை மயானத்தின் குறைவேலைகளை பூர்த்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

# குருபூசை விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகராலயத்தில் 28-5-64 வியாழக்கிழமை 6 மணிக்கு திருஞானசம்பந்தர் குருபூசை விழா ஆரம்பமாகியது.

"ஞானசம்பந்தர் மூன்றும் வயதலேயே ஞானம்பெற்றுத் தேவாரம் பாடத் தொடங்கினர். அவர் தனது புனிதவாய் மலர்ந்து அமுத அமுகை உலக ஆன்மாக்களை ஈடேற்றம் அடையச் செய்தது. அவர் பாடிய பதிகங்களை நாம் மனனம் செய்யவேண்டும், பின்பற்றவேண்டும்" என்று 'திருஞானசம்பந்தர்' என்னும் பொருள் பற்றி திரு. தி. சேதுராமன் பேசும் போது குறிப்பிட்டார்.

முடிவில் மறைந்த மேதை நேருஜியின் மறைவு குறித்து 5 நிமிடம் மௌனப் பிரார்த்தனை நடைபெற்றது.

# லாவோஸ் நெருக்கடி

## போலந்து யோசனை

வார்ஸோ, மே 29

லாவோஸ் நெருக்கடி குறித்து மூன்று முக்கிய அரசியல் பிரிவினருடனும் ஐந்து நாட்டுப் பிரதிநிதிகள் விரைவில் பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டுமென்று போலந்து யோசனை கூறியுள்ளது.

லாவோசுக்கான சர்வதேச கட்டுப்பாட்டு கமிஷனில் அங்கத்துவம் வகித்து போலந்து அண்மையில் கட்டுப்பாட்டுக் கமிஷனிலிருந்து விலகியது.

முதிவரும் லாவோஸ் நெருக்கடி குறித்து போலந்து ஒரு ... வெளியிட்டுள்ளது. லாவோஸில் மூன்று முக்கிய அரசியல் கட்சிகளாக விளங்கும் இளவரசர் சுவர்ணபூமாவை பிரதமராகக்கொண்ட நடுநிலைமைக்கட்சி, வலதுசாரி, கம்யூனிஸ்ட் பதட்லாவோ ஆகியவற்றின் தலைவர்களை அழைத்து இந்தப் பேச்சுகளை நடத்த வேண்டுமென்று போலந்து தெரிவித்துள்ளது.

இந்தப் பேச்சுகளில் கனடா, பிரிட்டன், இந்தியா, போலந்து ரஷ்யா, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகள் கலந்து கொள்ளலாமென்றும் இந்தப் பேச்சுகளை சுவிற்சர்லாந்தில் வைத்துக் கொள்ளலாமென்றும் போலந்து யோசனை கூறியுள்ளது.

எஸ்-லொன்



எஸ் - லொன்
இன்றைய அதிசயமான பைப்

இதுவே ஒரு உண்மையான பல்-பயன் தரும் பைப்.... திண்மையானது கனக் குறைவானது, மலிவானது, கையாள்வது சுலபம், உக்காது கறையான் அண்டாது. அரிப்பேற்படாது, கிருமி, கறள், அழுக்குப்படல எதிர்ப்புடையது. எஸ்-லொன் மின்சார கொண்டுயிட் வேலை உட்பட பெரும்பாலான வீட்டு, கைத்தொழில், விவசாய உபயோகத்திற்கு சிறந்த ஒப்பற்ற பைப்.

பைப் வேலை, உங்களுக்கு உண்டானல் அதற்கு உகந்த பைப் எஸ்லொன்தான் ஆகவே இன்றே எங்குமுள்ள சிறந்த ஸ்டோர்களில் அதைக் கேட்டு வாங்க நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்.
மகாராஜா கட்டிடம்.
பேங்ஷால் வீதி, கொழும்பு-11.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

**சனி 30-5-64**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கண்டதும் கேட்டதும் — செய்திச்சுருள், 7-00 பகவதி ரங்கராஜன், கமலா ஹரிஹர ஐயர் — பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 ஜி. சண்முகானந்தம் — வயலின், 10-00 நேயர்விருப்பம்.

**ஞாயிறு 31-5-64**

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-00 பௌத்தபோதனை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் ஞாயிறு பாடசாலை, 9-30 திரை இசை, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 கிரிஜா சுப்பிரமணியம் — பாட்டு, 5-45 திரை இசை.

இரவு 6-15 ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணியசுவாமி கோவிலில் இருந்து கூட்டுப்பிரார்த்தனை அஞ்சல், 7-15 நாடக அரங்கு — நாட்டுக்கூத்து — கொண்டி நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-45 தேர்ந்த இசை, 10-00 நிலைய ஒலிப் பதிவுகள்.


**REGAL — JAFFNA**

**NOW SHOWING**

Daily 3 Shows. Sats & SunsFour

**Drums of Africa**

M. G. M. color)


## நீச்சல் போட்டி

சுழிபுரம், வெள்ளி

யாழ்ப்பாண மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாஜத்தினரால் அடுத்த மாதம் 7-ம் திகதி பிற்பகல் 2 மணி தொடக்கம் கீரிமலையில் நீச்சல் போட்டி நடாத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர். இதற்கான சகல ஏற்பாடுகளையும் சி. தியாகராசாவை தலைவராகக் கொண்ட ஓர் உபகுழு கவனித்து வருகின்றது. இப் போட்டியில் மாணவர் போட்டி, வயது வந்தவர்கள் போட்டியென இரண்டு பிரிவாக நடைபெறும்.

## மகா கும்பாபிஷேகம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

புளியங் கூடல் ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மகா கும்பாபிஷேக தினத்தன்று "அம்பாள் மகிமை" என்னும் விடயம் பற்றி சங்கீத பூஷணம் திரு. எஸ். விஜை சித்தம்பி "காப்பிரசங்கம்" நிகழ்த்துவார். வேலணையூர், சங்கீதபூஷணம் செல்வி தருமலட்சுமி செல்லத்துரை கோஷ்டியினரின் இன்னிசை விருந்தும் நடைபெறும்.

## 300 சேலைக்கு 800 பேர் 'கியூ'

பருத்தித்துறை, வெள்ளி

300 சேலைகட்கு 800க்கு மேற்பட்டோர் வரிசையில் நின்ற சம்பவம் பருத்தித்துறை சி. டபிள்யூ. ஈ. வாசலில் நடைபெற்றது.

கடை திறக்க முன்பே பொலிசார் உதவி நாடப்பட்டது.

பெரும்பாலும் தூர இடங்களில் இருந்து வந்தவர்களே சேலை பெற முடியாது ஏமாற்றத்துடன் சென்றனர். அதிகாலை சுமார் ஏழுமணி அளவிலேயே அயலில் உள்ளவர்கள் டிப்போவை முற்றுகை இட்டு விட்டனர்.

## நூல் நிலையம் தீப் பிடித்தது

மாஸ்கோ, மே. 29

60 லட்சம் நூல்களும் சஞ்சிகைகளும் அடங்கிய உக்ரேனிலுள்ள மிகப் பெரிய நூல் நிலையமொன்று தீப்பிடித்து மூன்று நாட்களாகத் தொடர்ந்து எரிந்து கொண்டிருந்ததாம். மூன்று மாடிக் கட்டடத்திலுள்ள இந்த நூல் நிலையத்தில பிடித்த தீயை தீயணைக்கும் படையினரால் அணைக்க முடியாமல் போய்விட்டது.

யாழ்ப்பாண

மாநகரசபை

### கேள்வி விளம்பரம்

110-ம் வட்டாரத்திலுள்ளநரிக்குண்டில் கிணறு வெட்டுவதற்கும், சிமெந்தினால் இரண்டு தண்ணீர்த்தொட்டிகள் கட்டுவதற்கும்.

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து 2-6-64 நண்பகல் 12-00 மணிவரை அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் அவற்றின் பிரதியுடன் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(2) 1-6-64 நண்பகல் 12-00 மணிவரை கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாகரூபா ஐம்பதும் (ரூ. 50/), கேள்விப் பத்திரப்பணமாக ரூபா ஐந்து (ரூ. 5/) செலுத்தி மாநகரசபை மராமத்து என்ஜினியரிடமிருந்து கேள்விப் பத்திரவிண்ணப்ப படிவங்ள் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திர விண்ணப்ப படிவத்துக்குரிய பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. ஆனல் தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர் வேலை ஒப்பந்தம் செய்யபபட்டபின் கட்டுப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்,

(3) கேள்விப் பத்திரங் கள். திறக்கப்படும்பொழுது கேள்விதாரர்கள் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

மேலும் விபரங்களை காரியாலய நேரத்தில் மாநகரசபை மராமத்து எஞ்ஜினியரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம். டி.

டி. ஜெயசிங்கா,

மாநகர சபை ஆணையாளர்,

யாழ்ப்பாணம்.

நகர மண்டபம்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
22. மே. 1964. 380


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


### நன்றி நவிலல்

எங்கள் திருமண வைபவத்தின்போது நேரில் சமூகந்தந்தும் வாழ்த்துக்கள் அனுப்பியும், அன்பளிப்புகள் அளித்தும் எம்மை ஆசீர்வதித்த நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்படிக்கு

நவரத்தினம் தம்பதிகள்

395, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 468

## மரண அறிவித்தல்

### மாரிமுத்து தருமலிங்கம்

கனகம்மாவின் அருமைக் கணவரும் குலேந்திரம் (இலங்கைவங்கி கொழும்பு), சரோஜினி (ஆசிரியை வேம்படி மகளிர்கல்லூரி), கணேசலிங்கம், மகேந்திரம், ரோகிணி ஆகியோரின் தந்தையுமாகிய மா. தருமலிங்கம் அவர்கள் வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னரின் பூதவுடல் இன்று 30-5-64 காலை 9 மணியளவில் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். விகங்ஸ்டன்வாசம், 55, ஆஸ்பத்திரிவீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 465

## வருடமொன்றுக்கு 4 லட்சம் விவாக ரத்துக்கள்

வாஷிங்டன், மே 29

அமெரிக்காவில் வருடாவருடம் சராசரி 4 லட்சம் பேர் விவாக ரத்துப் பெறுகிறார்கள் இவர்களில் பலர் மீண்டும் மறுமணம் செய்துகொள்கிறார்கள்.

அமெரிக்கப் பெண்கள் பள்ளியில் படிக்கும்போதே தாம் திருமணம் செய்துகொள்வதற்காகக் தமது கணவர்களைத் தெரிவுசெய்து கொண்டுவிடுகிறார்கள். இளம் வயதிலேயே திருமண ஆசை ஏற்படுவதாலும், விரைவில் அதாவது சராசரி 20 வயதிலேயே எல்லாப் பெண்களுமே திருமணம் செய்துகொள்வதாலும் தான் இப்படிப்பட்ட விவாகரத்துக்கள் பெருகி வருகின்றது என்று கருதப்படுகிறது.

முன்னையைவிட இப்போது விவாகரத்துப்பெற்றுமறுமணம் செய்துகொள்பவர்களின் தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது.

## பிரதமர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் அங்கிருந்த இந்திய விமானத்திலேயே புதுடில்லி சென்றதாகவும் கூறப்படுகிறது. எனவே புதுடில்லியிலிருந்து நாளை காலை புறப்பட்டு பின்னர் சென்னை வந்து கொழும்பு திரும்புவார்.

## ஆயுர்வேத பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

வட இலங்கை சுதேச வைத்திய சபையினால் யாழ்ப்பாணம் லங்கா ஆயுர்வேத சித்தவைத்தியக் கல்லூரியில் சென்ற மார்ச் மாதம் நடத்தப்பட்ட வருடாந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்கள் தராதர ஒழுங்குடன் வருமாறு:

**நாலாம் வருடம்**

**(டி.ஏ.எம்.)**

1-ம் பிரிவு: ஜி. இராதாகிருஷ்ணன்.

2-ம் பிரிவு: எஸ். மகாலிங்கம்.

3-ம் பிரிவு: எம். தேவதுரம், எஸ். புவனேஸ்வரி, எஸ். பரராசசேகரம், கே. விசுவலிங்கம், எஸ். திருநாவுக்கரசு, வி. மாசிலாமணி, எஸ். சந்திரகாந்தி, எஸ். விநாயகமூர்த்தி.

**விசேட வகுப்பு**

**(எல். ஏ. எம். பி.)**

2-ம் பிரிவு: ஏ. கணேசான்.

3-ம் பிரிவு: ஜி. எட்வேட், எஸ். எக்ஸ். வேதநாயகம், டி. கே. சிவஞானம்.

**மூன்றும் வருடம்**

2-ம் பிரிவு: என். சற்குணசரோஜினி, ஏ. கலைமகள்.

3-ம் பிரிவு: ஆர். கனகலிங்கம், பி. அருளப்பு, ஈ. ஸ்ரீஜெயதேவி, எஸ். ஞானகணேசன், எஸ. முத்துலிங்கம், ஈ. குணநாதன்.

**இரண்டாம் வருடம்**

3-ம் பிரிவு: ஆர். முருகவேள், கே. முத்தையா, எஸ். றெஜி, எம். பகவதிப்பிள்ளை, கே. வேலாயுதம்பிள்ளை, எஸ். மிருத்தின்ஜெயம், கே. குணரத்தினம், கே. பாலசிங்கம், டி. சண்முகரத்தினம், கே. கந்தசாமி, கே. யேசுதாசன், ரி. சிவபுண்ணியம்.

**முதல் வருடம்**

2-ம் பிரிவு: ஈ. சந்திரோதயம்.

3-ம் பிரிவு: வி. குலசேகரம், ஏ. அன்ரனி, எஸ். சிவபாலன், ஆர். தில்லைநாதன், எஸ். திருநாவுக்கரசு, ஏ. அரசக்கோன், ஏ. தேவநாயகி, ரி. துரைராசா, கே. ஜெயரத்தினம், எஸ். செல்வேந்திரா, பி. பரமலிங்கம்.


**இப்பொழுது திரையிடப்படுகிறது !**

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு) |
| ராஜ் (நீர்கொழும்பு) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) |

தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-30

| | | |
|---|---|---|
| ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) | ஜுப்பிட்டர் (குருநாகலை) | தாஜ்மஹால் (கல்முனை) |

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி

ராதா - ராஜன் - புஷ்பலதா

நடிக்கும்



முருகன் பிரதர்ஸ்

**நானும் ஒரு பெண்**

இந்திய ஜனதிபதியின் வெள்ளிப்பதக்கம் பெற்ற சிறந்த சித்திரம்.


## வரி விளம்பரம்

### தேவை

தொண்டைமனறு சித்திவிநாயகர் ஆலயத்தின் உள் வீதியில் கிணறு வெட்ட ஒரு கொந்தருத்துக்காரர் தேவை. நேரில் தொடர்புகொள்க. வே. தில்லையம்பலம், தொண்டைமனறு. 460

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில் சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஒயின்மென்ற் சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம் தடிமன், தலையிடி, சந்துவி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்: GABRIELS, Chunnakam. 275

### நாவல்மர விற்பனை

பலவித நீளங்களைக்கொண்ட தறித்த நாவல் மரங்கள் பாவனைக்கும் விறகுக்கும் கீழ்க்காணும் விலாசத்தில் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம். வே. கைலாசபிள்ளை, மலாயன் பென்சனர், புத்தூர் கிழக்கு, புத்தூர். 457

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50 வைத்தியர் பரிபூரணநந்தா கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.

### வான் விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள 33 ஸ்ரீ 2000 சீறிஸ் போட் தேம்ஸ் (Ford Thams) விற்பனைக்குண்டு. 432, ஆஸ்பத்திரி வீதியில் பார்வையிடலாம். 448

### தேவை

அராலி ஐயனர் ஐக்கிய பண்டகசாலைக்கு மனேஜர் ஒருவர் தேவை. சம்பளம்: ரூ.75. பிணைப்பணம்: ரூ.1000 தராதரம்: எஸ். எஸ். ஸி. வயது 20 - 50. கூட்டுறவுப் பாடசாலையில் படித்தவராக இருந்தால் அதிகம் கவனம் செலுத்தப்படும். ஷ பண்டகசாலை காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். 463

### யாழ் கல்லூரி

தட்டெழுத்து சுருக்கெழுத்து ஆங்கிலத்தில் / தமிழில், சிங்களம். ஜி. சி. இ. சாதாரண கலை விஞ்ஞானம் வர்த்தகம். மேல்தரம், ஆங்கிலம். காலை மாலை வகுப்புகள். யாழ் கல்லூரி, 426, ஆஸ்பத்திரி ரோட், பெண்கள் கிளை, 29, பருத்தித்துறை ரோட்டு, யாழ்ப்பாணம். 459

### தேவை

சயிக்கிள்மூலம் பத்திரிகை விநியோகம் செய்வதற்கு ஆள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். த. பெ. எண் 49, யாழ்ப்பாணம். 466

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள CY .A 36 ஆஸ்டின் 8. கார் விற்பனைக்குண்டு. தெல்லிப்பளை ஸ்ரீ ஆனந்தா பேக்கறியில் ஞாயிற்றுக்கிழமைகளில் பார்வையிடலாம். 467

# யாழ்ப்பாணத்தில் சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா

யாழ்ப்பாணம், சனி

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையினர் வருடா வருடம் நடாத்தும் சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவை இவ்வாண்டு யாழ்ப்பாணம் தெற்குப் பகுதியில் கொண்டாடுவதென யாழ். மாவட்ட கூட்டுறவுச் சமாசஐ சங்கங்களின் பிரதிநிதிகள் கூடித் தீர்மானித்துக் கொண்டனர். சென்ற ஆண்டுபோல் இவ்வாண்டும் இவ் விழாவினைச் சிறப்பாக நடாத்துவதற்கு நிதி தந்துதவுமாறு கூட்டுறவுச் சமசமாஜங்கள் அனைத்தையும் விழாச் சபை கேட்டுக் கொள்கிறது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கென வரையறுக்கப் பட்ட நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி பயனடையுமாறு மாணவர்களுக்கு அறிவிக்கின்றது. பாடசாலை அதிபர்களின் ஒத்துழைப்பையும் விழாச் சபை வேண்டுகிறது.

மாணவர்களுக்கென நடாத்தப்படும் நிகழ்ச்சிகள் பின்வருமாறு:

## போட்டிகள்

### கட்டுரைப் போட்டி

(200 சொற்களுக்கு மேற்படாமல்)

**விடயம்**

கனிஷ்ட பிரிவு: ஐக்கிய நாணய சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், இலங்கையில் கூட்டுறவு இயக்கம் வளர்ந்த வரலாறு, ஒரு சிறந்த கூட்டுறவாளரின் பண்புகள், நீர் விரும்பும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கூட்டுறவால் நாட்டுயர்வு, றொச்டேல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைந்த வரலாறு, ஐக்கிய நாணய சங்கங்கள் ஏழை உழைப்பாளியின் தோழன், கூட்டுறவுக் கடன் வசதிகள், கூட்டுறவு இயக்கத்தில் மாணவர்களின் கடமை.

சிரேஷ்ட பிரிவு: கூட்டுறவின் அடிப்படைக் கொள்கைகள், கூட்டுறவும் ஜனநாயகமும், கூட்டுறவு மூலம் விவசாய அபிவிருத்தி. கூட்டுறவு மூலம் கைத்தொழில் அபிவிருத்தி, கூட்டுறவும் தேசிய ஒற்றுமையும், கூட்டுறவுச் சமுதாயங்கள், கூட்டுப் பண்ணை விவசாயம், கூட்டுறவில் அரசாங்கக் கட்டுப்பாடுகள் வேண்டுமா, பொருளாதாரக் குறைவை எங்ஙனம் கூட்டுறவால் நிறைவாக்கலாம், கூட்டுறவும் முதியோர் கல்வியும்.

இப்போட்டியில் பாடசாலை மாணவர்கள் மாத்திரம் பங்கு பற்றலாம். சிரேஷ்ட, கனிஷ்ட பிரிவுகளாகப் போட்டி நடாத்தப்படும். மேலே தரப்பட்ட விடயங்களிலொன்றில்கட்டுரை குறித்த திகதியில் பாடசாலைகளில் எழுதவேண்டும். இப்போட்டி யாழ்ப்பாண மாவட்ட உதவி வித்தியாதிபதியின் ஆதரவுடன் நடைபெறும். மாணவர்கள் மேலே தரப்பட்ட விடயங்களைப்பற்றி கட்டுரை எழுதுவதற்கு முன்னரே ஆயத்தம் செய்து கொள்ளல் வேண்டும், கட்டுரை எழுதும் இடம், திகதி, நேரம் முதலிய விபரங்கள் பின்பு அறிவிக்கப்படும். பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் 15-6-64-க்கு முன் திரு. து. சீனிவாசகம், 23, கன்னுதிட்டி வீதி, யாழ்ப்பாணம் அவர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

### பேச்சுப் போட்டி

(5 நிமிடம்)

இப்போட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாச வட்டார ரீதியில் பாடசாலை மாணவ மாணவிகளுக்கு சிரேஷ்ட, கனிஷ்ட பிரிவுகளாக நடாத்தப்படும்.

### கூட்டுறவுக் கீதம்

தனிப்பாடல் (5 நிமிடம்)

இப்போட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சமாச ரீதியில் பாடசாலை மாணவ மாணவிகளுக்கு இரு பிரிவுகளாக நடாத்தப்படும்.

கூட்டுப் பாடல் (7 நிமிடம்)

இப்போட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாச வட்டார ரீதியில் பாடசாலை மாணவ மாணவிகட்கு இரு பிரிவுகளாக நடாத்தப்படும் பங்குபெறுவோரின் தொகை மூன்றிற்குக் குறையாமலும் ஐந்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

### கூட்டுறவு நாடகப் போட்டி

(15 நிமிடம்)

இப்போட்டி கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாச வட்டார ரீதியில் நடாத்தப் படும்.

# ரூ.50,000 பெறுமான பொருள்கள்

## கள்ளக்கடத்தலின முல்லைத்தீவில் கைது

முல்லைத்தீவு, வெள்ளி

50,000 பெறுமதியான கள்ளக் கடத்தல் பொருள்கள் முல்லைத்தீவில் அளம்பிலுக்குச் சமீபத்தில் நேற்று முன் தினமிரவு பொலிசாரால் கைது செய்யப்பட்டதாக அறியப்படுகிறது.

இதுசம்பந்தமாக கிராமசபைத்தலைவர் ஒருவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஜவுளி மற்றும் பல பொருள்களும் பொலிசாரால் கைப்பற்றப் பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

ஒரு லொறி, ஒரு படகு ஆகியவையும் கைப்பற்றப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

# மதியழகனுக்கு விடுதலை

சென்னை, மே 29

ஹிந்தியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தமைக்காக 6 மாதகாலம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட தி. மு. க. தலைவர்களில் ஒருவரான திரு. கே. ஏ. மதியழகன் சென்னை சிறையிலிருந்து விடுதலை பெற்ளூர்.

சிறையிலிருந்து வெளியே வந்தபோது நெடுஞ்செழியன், கருணாநிதி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் மதியழகனுக்கு மாலைகள் போட்டு ராயப்பேட்டையிலுள்ள அவரது காரியாலயத்துக்கு அழைத்துச் சென்றனர்.

# மடாதிபதிக்கு சீன அழைப்பு

கண்டி, வெள்ளி

மல்வத்தை மடாதிபதி வண. அமுனுகம ராஜகுரு ஸ்ரீவிபாசி மஹாநாயக்க தேரோவைச் சீனவுக்கு வரும்படி சீன அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது. ஜூன் 24-ந் திகதி முதல் 27-ந் திகதி வரை நடைபெறவிருக்கும் ஒரு சைத்தியத்தின் கட்டிடப் பூர்த்திவிழாவிற்கலந்துகொள்வதற்காகவே இந்த அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. அழைப்பை ஏற்றுக்கொள்வது பற்றி மடாதிபதி இன்னமும் எதுவித முடிவுஞ் செய்யவில்லை.

# தேசிய சுவீப் . . .

(1ம்- பக்கத் தொடர்ச்சி)

தலா ரூ. 310 பரிசு பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 22 | T | 0298 | 10 | F | 0462 |
| 09 | X | 0591 | 15 | Y | 0912 |
| 01 | V | 0653 | 07 | F | 0633 |
| 09 | Y | 0591 | 15 | Z | 0912 |
| 28 | Q | 0384 | 16 | Z | 0715 |
| 09 | Z | 0591 | 16 | A | 0057 |
| 05 | S | 0418 | 19 | J | 0826 |
| 15 | A | 0912 | 16 | B | 0057 |
| 03 | Q | 0274 | 09 | A | 0591 |
| 15 | B | 0912 | 16 | e | 0057 |
| 15 | F | 0521 | 09 | B | 0591 |
| 15 | C | 0912 | 16 | E | 0057 |
| 18 | Y | 0398 | 09 | C | 0591 |
| 15 | D | 0912 | 16 | F | 0057 |
| 04 | W | 0573 | 09 | D | 0591 |
| 15 | E | 0912 | 16 | G | 0057 |
| 11 | M | 0119 | 09 | E | 0591 |
| 15 | F | 0912 | 16 | H | 0057 |
| 09 | T | 0003 | 09 | F | 0591 |
| 15 | G | 0912 | 16 | J | 0057 |
| 05 | D | 0685 | 09 | G | 0591 |
| 15 | H | 0912 | 16 | K | 0057 |
| 13 | V | 0953 | 09 | H | 0591 |
| 15 | J | 0912 | 16 | L | 0057 |
| 07 | K | 0563 | 09 | J | 0591 |
| 15 | K | 0912 | 16 | M | 0057 |
| 09 | T | 0062 | 09 | K | 0591 |
| 15 | L | 0012 | 16 | N | 0057 |
| 02 | C | 0450 | 09 | L | 0591 |
| 15 | M | 0912 | 16 | O | 0057 |
| 19 | K | 0225 | 09 | M | 0591 |
| 15 | N | 0912 | 16 | P | 0057 |
| 13 | V | 0879 | 09 | N | 0591 |
| 15 | P | 0912 | 16 | Q | 0057 |
| 16 | O | 0927 | 09 | O | 0591 |
| 15 | Q | 0912 | 16 | R | 0057 |
| 20 | D | 0235 | 09 | Q | 0591 |
| 15 | R | 0912 | 16 | T | 0057 |
| 05 | X | 1213 | 09 | R | 0591 |
| 15 | S | 0912 | 16 | U | 0057 |
| 20 | G | 0763 | 09 | S | 0591 |
| 15 | T | 0912 | 16 | V | 0057 |
| 04 | K | 0228 | 09 | T | 0591 |
| 15 | U | 0912 | 16 | W | 0057 |
| 07 | H | 0399 | 09 | U | 0591 |
| 15 | V | 0912 | 16 | X | 0057 |
| 13 | O | 0256 | 09 | V | 0591 |
| 15 | W | 0912 | 16 | Y | 0057 |
| 04 | X | 0795 | 09 | W | 0591 |
| 15 | X | 0912 | 16 | Z | 0097 |

# நேருவின் மறைவுக்கு அனுதாபச் செய்திகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

"உண்மையும் நேர்மையும் மிக்க உத்தமரான நேருஜியை உலகம் இழந்துவிட்டது. உலக அரசியல் அரங்கில் ஒப்பற்ற தலைவராக, ஆசியாவின் ஜோதியாக, இணையற்ற அரசியல் மேதையாக வாழ்ந்த நேருஜி போன்ற தலைவரை இனிக் காண்பதரிது அன்னாரின் ஆன்மா சாந்தியடைய உலகத் தமிழ் மன்றம் பிரார்த்திக்கின்றது" என்று அகில உலகத் தமிழ் மன்றத்தின் இலங்கைக் கிளைச் செயலாளர் திரு. கு. வி. செல்லத்துரை தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

●

"பாரதப் பிரதமர் நேருஜி மறைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம். அவரின் மறைவு இந்தியாவுக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதற்குமே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்" இவ்வாறு யாழ்ப்பாணம் இலங்கை-இந்தியர்சங்கத்தின் அனுதாபச்செய்திகூறுகிறது.

●

ஆசிய ஜோதியும் பாரதப் பிரதமருமான ஜவர்ஹர்லால் நேருவின் அகால மறைவு குறித்த அனுதாபச் செய்தியொன்றை கட்டைவேலி வர்த்தகர் சங்க சார்பில் ஸ்ரீநேருவின் குடும்பத்தினருக்கு தந்தி மூலம் தலைவர் திரு. க. ஞான சுப்பிரமணியம் அனுப்பிவைத்துள்ளார்.

நெல்லியடியிலுள்ள கடைகள் யாவற்றிலும் குறிப்பாக இலங்கை வாழ் இந்தியர்களுடைய வீடுகளிலும் கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டது.

●

சுழிபுரம் கிராம சபை புதிய கட்டடத்தில் முதல் முதலாக கறுத்தக்கொடி பறக்கவிடப் பட்டது. பாரதப் பிரதமர் நேரு காலமானதைக் குறித்து அனுதாபம் தெரிவித்ததுடன் கறுத்தக்கொடி பறக்கவிடப்பட்டு இருந்தது. இப்பகுதியிலுள்ள பொது ஸ்தாபனங்கள் நேருஜீக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் மூடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டன.

# "குபேரனாகப் பிறந்தவர் மாபெரும் தியாகியானுர்"

## யாழ். மாநகரசபையில் நேருவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், வெள்ளி

"செல்வாக்குள்ள குடும்பத்திலே பிறந்து செல்வத்திலே வாழ்ந்த நேருஜீ மாபெரும் தியாகியாக மாறியது யாருமே செய்யமுடியாததொன்றாகும். முதலாளித்துவ அடிப்படையிலே வளர்ந்துகொண்டுவந்த அவர், தன் இளம் மனைவியை மறந்து நாட்டுக்காகச் சிறை சென்றார் தங்கக் காசுகளுக்கு மத்தியிலே தவழவேண்டிய அவர் செப்புக் காசைக்கூட வாங்காது தனது நாட்டுக்கே எல்லாவற்றையும் அர்ப்பணித்தார். அவரை இழந்தது உலகத்துக்குப் பேரிழப்பு".

இவ்வாறு பாரதப் பிரதமர் நேருஜியின் மறைவு குறித்து யாழ் மாநகரசபையில் இன்று மாலை மேயர் திரு தா. ச. துரைராசாவின் தலைமையில் நடைபெற்ற அனுதாபக் கூட்டமொன்றில் திரு. ஆ. துரைராஜசிங்கம் தீர்மானமொன்றைப் பிரேரித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இதைத் தொடர்ந்து அங்கத்தவர்கள் எழுந்து நின்று இரண்டு நிமிடங்கள் மௌனஞ் செலுத்தினர்.

திரு. நா. த. செல்லத்துரை பேசுகையில், கூறியதாவது:-

"சாதியை இந்தியாவில் இல்லாமல் செய்தவர் நேருஜி. அவர் செய்த பெரும் சேவைகளில் இது மகத்தான தொன்று" என்ளூர்.

ஜனுப் அபுகாலி பேசுகையில் "ஐ. நா. சபையிலே நேருவின் மரணம் குறித்து அதன் கொடிகளைத் தாழ்த்திப் பறக்கவிட்டது அவரின் புகழை நன்கு புலப்படுத்துவதாக இருக்கிறது" என்ளூர்.

திரு. பீட்டர் சோமசுந்தரம் பேசுகையில் "மத அடிப்படையின்றி எல்லா மதத்தினரையும் ஒரேமாதிரியாகப் பாவித்து தனது அரசாங்கத்தில் பாகுபாடின்றி எல்லா மதத்தினருக்கும் பதவி கொடுத்தவர். ஐ. நா. சபையிலே சீனவுக்கு இடமளிக்குமாறு வற்புறுத்தியவர்" என்ளூர்.

திரு. ஜே. எஸ். அழகையா பேசுகையில், "மகாத்மா காந்திக்குப் பிறகு ஆசியாவுக்கு வழிகாட்டியாக இருந்த மேதை நேருஜி" என்ளூர்.

திரு. சுல்தான் பேசுகையில், "நேருஜியின் பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் என்றென்றும் மறையாது" என்ளூர்.

திரு. எஸ். மகாதேவா பேசுகையில், "உலகத்துக்கு அஹிம்சை வழியையும், பொதுநல சேவையையும் போதித்த ஆசான்" என்ளூர்.

திரு. பேரின்பநாயகம் பேசுகையில், "இந்திய நாட்டுக்காகச் சிறைவாழ்வை அனுபவித்து, உலகத்துக்காகப் பாடுபட்ட நேருஜி போன்ற தலைவரை நாம் என்றும் காணமுடியாது" என்ளூர்.

நேருஜியின் குடும்பத்துக்கு அனுதாபத் தீர்மானத்தை அனுப்புவதென தீர்மானிக்கப் பட்டது.

கூட்டம் இரண்டு நிமிட அஞ்சலியுடன் முடிவடைந்தது.

# "எங்கும் சூன்யம்"

புதுடில்லி, மே 29

"இந்த பார்லிமெண்டும், இந்தத் தேசமும் ஜவஹர்லால் நேரு இல்லாமல் சூன்யமாகிவிட்டது. அதை ஒரு போதும் பூர்த்தி செய்ய முடியாது. நேருவைப் போன்ற கருணை உள்ளம் படைத்த உத்தம அரசியல் தலைவரை உலகம் கண்டதே இல்லை" என லோகசபையில் பேசிய கம்யூனிஸ்ட் அங்கத்தினர் ஹிரேன் முகர்ஜீ கூறினர்.

"நேருவுடன் ஒன்ருகச் செயலாற்றிய எனக்கு ஆயிரக்கணக்கான நினைவுகள் உள்ளத்தில் நிறைந்திருக்கின்றன. அவரைப் போல் மனிதப் பாண்புமிக்கவரை நான் கண்டதில்லை" என்ருர் ஆச்சார்யா கிருபாளினி.

# ஸ்ரீமதி பண்டாரநாயகா-நந்தா சந்திப்பு

புதுடில்லி, மே 28

இன்று டில்லி ராம்லீலா மைதானத்தில் ஸ்ரீநேருவின் மறைவைக் குறித்து நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகா, அமெரிக்க வெளிநாட்டுமந்திரி திரு. டீன் ரஸ்க், சோவியத் உதவிப் பிரதமர் உள்ளிட்டு பல வேறு முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

ஸ்ரீமதி பண்டாரநாயகா பிரதம மந்திரி திரு. நந்தாவையும் தனிப்பட்டமுறையில் சந்தித்தார்.

# கதம்ப விழா

யாழ்ப்பாணம், சனி

விவசாய, கைத்தொழில் பொருட்காட்சியும் கதம்பவிழாவும் இன்று பிற்பகல் கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலையில் நடைபெறும். இவ் விழா யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. என். டி. ஜெயவீர தலைமையில் ஆரம்பமாகும். மேளக்கச்சேரி, கிராமிய நடனங்கள், காவடி ஆட்டம், மெல்லிசை போன்ற பல நிகழ்ச்சிகள் இடம் பெறும். தவில் வித்துவான் திரு. கே. பழனி மலைக்கு அரசாங்க அதிபர் பொன்னுடை போர்த்துவார்.

# திருமண அழைப்பு

யாழ்ப்பாணம் பொதுமராமத்து இலாகாவில் (P. W. D.) கடமையாற்றுபவரான கொக்குவில் திரு. அ. க. சுப்பிரமணியம் அவர்களின் புதல்வி செல்வமலர் அவர்களுக்கும் ஊரெழு சிவகுரு அவர்களின் புதல்வன் செல்வன் திரு. சித்திவிநாயகப்பிரகாசம் அவர்களுக்கும் (G, P. O.) பெரிய தபாற் கந்தோர் கொழும்பு. நிகழும் குரோதி வருடம் வைகாசி மாதம் 19 ந் திகதி (1-6-64) திங்கட்கிழமை காலை 10-00—12-30 வரையுள்ள சுப முகூர்த்தத்தில் மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் [illegible] களும், உறவினர்களும் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதித்து மகிழும்வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். பி. கு. தனிப்பட்ட அறிவித்தல் கொடுபடவில்லை.

இங்ஙனம்,
அ. க. சுப்பிரமணியமும்,
பாரியாரும்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். 469

# காணவில்லை

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் ஜெபஜெய வாசாவில் இருக்கும் P. J. ஞானமுத்துவின் 17 வயது மகன் (G. C. E. மாணவன்) ஜெபரெட்ணம் 20-5-64 தொடக்கம் காணவில்லை. கறுப்பு அரைக்கால் சட்டையும் கோடிட்ட வெள்ளை சேர்ட்டும் அணிந்து மூன்று புத்தகங்களுடன் பாடசாலை சென்றவர். பொலிஸ் நிலையத்திற்கோ, மேற்காட்டிய விலாசத்திற்கோ கண்டவர்கள் அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 470

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 65ம் இலக்கத்தி[illegible]ன்ன அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் 30-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.